பக்கங்கள் 12+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 05 புதன்கிழமை 20.11.2024 | அதிர்வு 111

## மண்மேடு சரிந்து வீழ்ந்து பாடசாலை மாணவன் பலி

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெதமஹனுவர, கல்லேவத்தை பிரதேசத்தில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# சி.ஐ.டியில் பிள்ளையான் 5 மணிநேரம் வாக்குமூலம்

## விரைவில் கைதாகும் சாத்தியம்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று முன்னிலையாகி 5 மணிநேரம் வாக்குமூலம் வழங்கிய பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் அங்கிருந்து வெளியேறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ‘சனல் 4’ தொலைக்காட்சி தயாரித்த விசேட காணொளியொன்றில் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் முன்னாள் செயலாளரான அஸாத் மௌலானா என்பவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

அதில் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்கும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய தாக்குதல்தாரிகளுக்கும் தொடர்பு இருந்தது என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

02 ▶

## ஹரின் இன்று கைதாகி பிணையில் விடுவிப்பு



தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டுக்காகக் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பதுளை பொலிஸாரால் இன்று காலை செய்து செய்யப்பட்ட ஹரின் பெர்னாண்டோ, விசாரணைகளின் பின்ன பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது 5 இலட்சம் ரூபா பெறுமதியிலான இரண்டு சரீர பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டார்.



## சி.ஐ.டியில் ஸ்ரீரங்காவும் வாக்குமூலம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க பயன்படுத்திய வாகனமொன்று தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக,

02 ▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# மன்னார் வைத்தியசாலையில் உயிரிழந்த தாய், சேய் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனாவுக்கு அனுப்பிவைப்பு

## மத்திய சுகாதார அமைச்சின் விசேட குழு நேரில் வந்து விசாரணைகளை ஆரம்பித்தது

(எஸ்.ஆர்.லெம்பேட் )

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை பிரசவத்திற்காக அனுமதிக் கப்பட்ட நிலையில் மரணமடைந்த இளம் தாய் மற்றும் சேயின் சடலங்கள் மேலதிக பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்று இரவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார், பட்டித்தோட்டம் பகுதி யைச் சேர்ந்த 28 வயதான இளம் தாய் வேணுஜா என அழைக்கப்படும் ஜெகன் ராஜ சிறி திருமணமாகி 10 வருடங்கள் பிள்ளை இல்லாத நிலையில் நேற்று பிரசவத்திற்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் அனுமதிக்கப்பட்ட நிலை யில் சிகிச்சையின்போது தாயும் சேயும் மரணமடைந்துள்ளனர்.

இந்தநிலையில் உறவினர்கள், பெற்றோர்கள் உட்பட நூற்றுக்கணக் கான பொதுமக்கள் ஒன்றினைந்து மகப் பேற்று விடுதியில் போராட்டம் நடத் திய நிலையில் வைத்தியசாலையில் பதற்றமான நிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத் துக்கு வருகை தந்த பொலிஸார் நிலை மையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார் நீதிவான் இறந்த தாய் மற் றும் சேயின் சடலங்களைப் பிரதே பரி சோதனைக்காகவும்,மேலதிகவிசாரணை களுக்காகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கு மாறு உத்தரவிட்டார்.

நீதிவானின் உத்தரவுக்கு அமைய சடலங்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் என.

இதேவேளை, மேற்படி மரணம் தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட விசேட குழு இன்று புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு வருகை தந்து விசாரணை களை முன்னெடுத்து வருகின்றது என்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்தியர் ஆசாத் எம்.ஹனிபா தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சி.ஐ.டியில் பிள்ளையான்...

இந்தநிலையில், அவர் வெளிப்படுத் திய இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், இன்று அங்கு முன்னிலையாகி 5 மணித்தியா லங்கள் வாக்குமூலம் வழங்கியதைய டுத்து அங்கிருந்து அவர் வெளியேறி னார்.

எனினும், வாக்குமூலத்தின் அடிப்படை யில் அவர் விரைவில் கைதாகக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### சி.ஐ.டியில் ஸ்ரீரங்காவும்...

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீரங்கா இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி யிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

"2014ஆம் ஆண்டு எனது வாகன அனுமதிப் பத்திரத்தை வியாபாரிக ளுக்குக் கொடுக்கவில்லை.

விபத்துக்குள்ளான எனது வாக னத்தை சுஜீவ சேனசிங்கவுக்கு வழங்கி யிருந்தேன்.

2014ஆம் ஆண்டு வழங்கிய வாகனம் தொடர்பில் இன்று என்னை வாக்குமூலம் வழங்குமாறு கேட்டிருந்த னர்.

அதற்காக இன்று வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்று வந்தேன்." – என்றார்.

### மண்மேடு சரிந்து...

16 வயதுடைய செனர டில்ஷான் என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

சீரற்ற காலநிலையால் இன்று அதி காலை 4.30 மணியளவில் வீடொன் றுக்கு அருகிலிருந்த மண்மேடு சரிந்து வீழ்ந்த நிலையில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த பாடசாலை மாணவன் மண்ணுக்குள் புதைந்துள்ளார்.

இந்நிலையில், மாணவன் மீட்கப்பட்டு மெதமஹனுவர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 61 வயதுடைய பெண் ணும், 14 வயது சிறுவனும் படுகாய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.




# வடக்கின் வாழ்வாதாரத்துக்கு 12 மில்லியன் ரூபா நிதி உதவி

## சீனத் தூதுவரால் ஆளுநரிடம் கையளிப்பு

வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில், சீன அரசால் 12 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் இன்று புதன்கிழமை கையளித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று காலை இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழுவினர் சந்தித்தனர். இதன்போதே அவர் இந்தக் காசோலையைக் கையளித்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட நாகலிங்கம் வேதநாயகனுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்த இலங்கைக்கான சீனத் தூதுவர், இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு தமது பங்களிப்பு இருக்கும் என்றும் உறுதியளித்தார்.

வட பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அவதானிக்கையில் சந்தோசமாக இருப்பதாகவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான சீனத் தூதுவரை வரவேற்ற வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணத்தில் ஊழல் ஒழிப்பு, அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

வட பகுதி விவசாயிகளின் நீண்டகாலப் பிரச்சினையாக அவர்களின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குரிய வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன என்பதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.


மேலும், வடக்கு மாகாணத்தின் மற்றொரு முக்கிய வளமான மீன்பிடி மூலமாக பிடிக்கப்படும் மீன்கள் அப்படியே ஏற்றுமதி செய்யப்படுகின்றன எனவும், அவை உற்பத்திப் பொருள்களாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்துக்கு சீன அரசு தொடர்ச்சியாக உதவிகளைச் செய்யும் என்பதைக் குறிப்பிட்ட சீனத் தூதுவர், வடக்கு மாகாண மக்கள் மிகவும் அன்பாக வரவேற்பு உபசரிப்பது தமக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், சீனாவில் 800 மில்லியன் மக்களின் வறுமையைக் கடந்த தசாப்த காலத்தில் இல்லாதொழித்ததாகவும், அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகத்துடன் ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலனும் பங்கேற்றார்.












# பற்றிமாவில் ஆங்கில இலக்கிய மன்றம்

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் வருடாந்த ஆங்கில இலக்கிய மன்றத்தின் நிகழ்வு கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் நேற்று (19) கல்லூரியில் நடைபெற்றது.



# மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை அடைவதற்காகச் செயற்படுவோம்

## நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவிப்பு





மக்கள் எதிர்பார்க்கும் சமூக மாற்றத்தை அடைவதற்காக அரச அதிகாரிகளாகவும் கொள்கை வகுப்பாளர்களாகவும் செயற்படுவோம்.

நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் அனுர கருணாதிலக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஒரு பெரிய சமூக மற்றும் மனப்பான்மை மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் புதிய இடத்தை உருவாக்கியுள்ளனர் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பதவியேற்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது (19) அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

மக்கள் எதிர்பார்க்கும் சேவையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. ஆனால், கடந்த காலங்களில் அரச அதிகாரிகளாக இருக்கும் ஒரு சில அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் மக்களிடம் நல்ல அபிப்பிராயம் இல்லை.

அதனுடன் உள்ள காரணங்கள் மற்றும் பல காரணிகளால், மக்களிடையே ஒரு மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதன்படி, மக்கள் புதிய இடத்தை உருவாக்கியுள்ளனர். சமூகத்திலும் வாழ்விலும் ஒரு மாற்றத்தை உருவாக்கவும், அணுகு முறையில் மாற்றத்தை உருவாக்கவும் மக்களே வாய்ப்பளித்துள்ளனர்.

தற்போது இந்த வாய்ப்பை சரியாகப் புரிந்து கொண்டு மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை அடைவது அல்லது வழக்கமான பாதையில் செல்வதுதான் இப்போது எமக்குச் சவாலாக உள்ளது.


நாங்கள் வழமையான பாதையைத் தெரிவு செய்தால் மக்களின் எதிர்பார்ப்புகளை தவறவிட்ட தோல்வியுற்றவர்களாக வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டிவரும். ஆனால், ஒருபுறம், பொது மக்கள் நமக்காக உருவாக்கிய மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றும் அந்த இடத்தை நாம் தேர்வு செய்தால், நாம் திரும்பிப் பார்க்கும்போது மக்களின் நம்பிக்கைக்காக ஏதாவது செய்தவர்களாக நம் வாழ்வில் திருப்தி அடையலாம்.

அது போலவே எம்மைப்பற்றி பொது மக்களுக்கும் சில யோசனைகள் உள்ளன. நாட்டின் சிறுவர், சிறுமி மற்றும் அனைவரிடமும் இருந்து அன்பையும் மரியாதையையும் பெற்றுள்ளோம். அந்த பணிகளை நிறைவேற்றும் பெரிய பொறுப்பு நம் இருவருக்கும் உள்ளது.

நகர அபிவிருத்தி விடயத்தை எடுத்துக் கொண்டால், அது ஒரு நாட்டில் மக்கள் வாழும் முறையைப் பிரதிபலிக்கும் ஒரு துறையாகும். அதுபோல வீடமைப்புத் துறையை எடுத்துக் கொண்டால், நாட்டில் வாழும் மக்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பதை அறியும் துறை அது. இந்தத் துறைகளை உயர்த்த வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. அதற்குத் தேவையான ஆதரவை நீங்கள் அனைவரும் வழங்குவீர்கள் என்று நம்புகிறேன். அங்கு மக்கள் எங்களிடம் அதிகம் எதிர்பார்க்கவில்லை. பொதுச் சேவைகளை வழங்குவதில் அவர்கள் எதிர்பார்க்கும் முக்கிய விடயங்களில் ஒன்று, சேவைகள் திட்டத்துடன் வழங்கப்படுகிறதா என்பதுதான். அதனுடன், அந்தச் சேவையை வழங்க அவர்கள் எவ்வளவு திறமையாக வேலை செய்கிறார்கள் என்பதும் தான். அதேபோன்று நாங்கள் சேவை வழங்குவது எந்த அளவுக்குத் தூய்மையானது என்றும் எதிர் பார்க்கின்றனர்.

இந்த சேவையை நாங்கள் நிதிப் பக்கத்தில் மற்றும் நட்பு மற்றும் பிற உறவு முறைகள் இல்லாமல் வழங்குகிறோமா? அது போல எங்கள் சேவையை நாங்கள் எவ்வளவு திறம்படச் செய்கிறோம் என்பதை மக்கள் எங்களிடம் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக நாங்கள் இருவரும் பணியாற்றும்போது, முடிவுகளின் மேலாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் என்ற வகையில் பொதுச் சேவையின் தொழில் முறை பெருமைக்கு நாங்கள் தீங்கு விளைவிக்காமல் இருப்பதை உறுதி செய்கிறோம். அந்த உறுதியுடன், மக்கள் பாடுபடும் சமூக மாற்றத்தை உருவாக்க அரசு அதிகாரிகளாகவும், கொள்கை வகுப்பாளர்களாகவும் இணைந்து செயல்பட நாங்கள் பாடுபடுவோம். அதற்காக அனைவரின் அதிகபட்ச ஆதரவையும் எதிர்பார்க்கிறோம்.– என்றார்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கை நழுவும் ஜெனிவா!

தமிழர்களின் உரிமைகளுக்கான - வாழ்வியல் இருப்புக்கான - இனத்துவ, தனித்துவ நலனுக்கான - விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய பின்னர், அதனை வழிநடத்தும் பொறுப்பைச் சுவீகரித்துக் கொண்ட விடுதலைப் புலிகள் 2009 மேயில் அந்தப் போராட்டம் இலங்கைப் படைகளினால் மிக மோசமான யுத்தக் குற்ற நடவடிக்கைகள் மூலம் முறியடிக்கப்படும் வரை அதனைத் தீரத்துடன் - அளப்பரிய தியாகத்துடன் - முன்னெடுத்தார்கள்.

ஆயினும், அந்தப் போராட்டத்தின் முடிவில் அவர்கள் தமது மக்களையும் போராட்டத்தையும் நடுவழியில் விட்டுச் சென்றார்கள் என்று கூறி விட முடியாது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நடு மத்தியில் தமிழர்களின் போராட்டத்தை நியாயத்துடன் தொடர்வதற்கான களத்தை திறந்து வைத்துக் கொண்டே அவர்கள் போராட்ட களத்தில் இருந்து வெளியேறும் சூழ்நிலையை எதிர் கொண்டார்கள்.

ஆனால், அதன் பின்னர் கடந்த பதினைந்து ஆண்டு கால முறையற்ற செயற்பாட்டினால் இன்று அந்த ஜெனிவாக் களத்தையும் தொலைத்து விட்டுத் தன்னைத் தானே பரிதாப நிலைக்குக் கொண்டு சென்று தள்ளியிருக்கின்றது ஈழத் தமிழினம். அதனைத்தான் இப்போது தென்னிலங்கை சட்டத்தரணி பிரதீபா மஹானாம கொழும்பில் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

“வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். அரசியல் கட்டமைப்பில் இருந்து தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று ஜெனிவாவில் இனிக் கேள்வியெழுப்ப முடியாது.

“பொதுத்தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 21 தேர்தல் மாவட்டங்களிலும் அமோக வெற்றிப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

‘வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பாரம்பரியமான அரசியல் கலாச்சாரத்தில் இருந்து விலகி, புதிய அரசியல் கலாச்சாரத்துக்குள் பிரவேசித்துள்ளார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் - குறிப்பாக தமிழ் மக்கள் - ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். எவ்விதமான அரசியல் கூட்டணியுமில்லாமல் தேசிய மக்கள் சக்தி வெற்றிப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

“வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றே கடந்த காலங்களில் சர்வதேச மட்டத்திலும், சர்வதேச மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் தொடர்ச்சியாகக் குறிப்பிடப்பட்டது. இந்த விடயங்களை முன்னிலைப்படுத்தி இலங் கைக்கு எதிரான பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் - குறிப்பாகத் தமிழ் மக்கள் - முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். எவ்விதமான எதிர்பார்ப்பு மற்றும் நிபந்தனைகளின்றி ஆதரவளித்துள்ளார்கள். ஆகவே பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்று இனி ஜெனிவாவில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது.

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் 2025 பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது. தமிழ் மக்கள் புதிய அரசியல் கட்டமைப்புக்குள் பிரவேசித்துள்ளார்கள், பழைய பாரம்பரியமான அரசியல் கட்டமைப்பை புறக்கணித்துள்ளார்கள் என்ற செய்தியை அரசாங்கம் சர்வதேச அரங்கில் எடுத்துரைக்க வேண்டும். அத்தோடு தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி நாட்டின் சட்ட கட்டமைப்புக்குள் இருந்துக் கொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும்.” - என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஜெனிவா தளத்தில் போர் குற்ற விடயங்கள் உட்பட பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் கொழும்பு அதிகார பீடத்திற்கு அங்கு தொடர்ந்து முண்டு கொடுத்துக் காப்பாற்றி வரும் பிரதான நாடுகளில் ஒன்று சீனா. அதன் தூதுவர் யாழ்ப்பாணத்தில் வந்து நேற்று எடுத்துரைத்துள்ள கருத்தும் இந்தப் போக்கிலேயே அமைந்துள்ளது.

“அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருக்கின்றது என்றே நான் நம்புகின்றேன். அந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருப்பதானது தமிழ் மக்கள் பரந்த சிந்தனையோடு விடயங்களை இப்போது நோக்க ஆரம்பித்திருக்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது.” - என்று அவர் கூறியிருக்கின்றார்.

ஆக, நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஈழத் தமிழர்கள் - குறிப்பாக வடக்குத் தமிழர்கள் - பொறுப்பின்றி, தீர்க்கதரிசன சிந்தனையின்றி, விளைவுகளின் பெறு பேறுகளைச் சீர்தூக்கிப் பார்க்காமல் தங்கள் தலையில் தாங்களே மண்ணள்ளிப் போட்டு இருக்கின்றார்கள் என்பதை மேற்படி கருத்துக்கள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

போராளிகளின் அளப்பரிய தியாகத்தில் உருவான நமது களத்தை நாமே கெடுத்துக் குட்டிச்சுவராக்கி சீரழித்திருக்கிறோம். இந்தத் தேர்தலில் நட்டாமுட்டித்தனம் பண்ணிய வடக்கு வாக்காளர்களின் சீத்துவப் பெறுபேறு இதுதான்....!




# புத்தகப் பைகள், பாதணிகள் மாணவர்களுக்கு வழங்கல்!

(ஹஸ்பர் ஏ.எச் )

தோழர் பத்மநாபவின் பிறந்த தினத்தைத் தோழமை தினமாக நினைவு கூர்ந்து நேற்று (19) திருகோணமலை ஸ்ரீ ராமகிருஷ்ணா தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கு புத்தகப் பைகளும் பாதணிகளும் வழங்கப்பட்டன.

கட்சியின் தோழர்களால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.





# நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய மட்டத்தில் சாதனை




(மாளிகைக்காடு)

கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பாடசாலை மெய்வல்லுநர் சங்கம் நடத்திய அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட சேர் ஜோன் ரபட் கனிஷ்ட மெய் வல்லுனர் சம்பியன்ஷிப்-2024 கடந்த மூன்று நாள்களாக மாத்தறை கொடவில விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுள்ளது.

தேசிய மட்ட சேர் ஜோன் ராபர்ட் கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் கல்முனை கல்வி வலய நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாட சாலையின் 12 வயது பிரிவைச் சேர்ந்த முஹம் மட் ஹாரீஸ் முஹம்மட் கின்சான் 80 மீற்றர் நிகழ்ச்சியில் 11 வினாடியில் ஓடி முடித்து 03 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

இவரை பயிற்றுவித்த பொறுப்பாசிரியர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஆகியோர்களுக்கும் மற்றும் மாணவனை அழைத்துச் சென்று வழிநடத்திய உடற்கல்வி ஆசிரியர் ஏ. ஹலீம் அஹமட் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்து ஒத்துழைப்பு வழங்கிய மாணவனின் பெற் றோர்களுக்கும் பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூர் அஷ்ரக்கியன் சமூகம் சார்பாக நன் றிகளைத் தெரிவித்தார்.



# வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு!

(எம். எப். நவாஸ்)

2024 ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் கோணாவத்தை பொது நூலகத்திலும் ஆலங்குளம் பொது நூலகத்திலும் மாணவர்களுக்கான 100 இலவச அங்கத் துவங்கள் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கான வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பொது நூலகத்தின் பட்டய நூலகர் எ.சி.அன்வர் சதாத் தலைமையில் இன்று (20) நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு அதிபர்களான முனாஸ், அஸ்மி மற்றும் நூலக ஊழியர்களான எ.ஆர்.சியாத், எ.வி.அன்வர், எ. எம்.முனல்லறா, கே.எல்.றியாஸ், எப்.றினோஸா மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.




# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா வடக்கில் உதவிகள்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாகப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை வரவு குறைந்த பிள்ளைகளின் வரவை மேம்படுத்துவதற்காகவும், பொதுப் போக்குவரத்து வசதியை இலகுபடுத்துவதற்காகவும், மாதந்தம் வவனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு வழங்கும் போக்குவரத்து சேவைக்கான கார்த்திகை மாத வாகன கொடுப்பனவு 85 ஆயிரத்து 650 ரூபா வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதே வேளை, வவுனியா, கல்மடு பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தினரின் 61 மூத்தோரை கௌரவிப்பதற்காக ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைகள் மற்றும் 30 ரூபா நிதியும் வழங்கிவைக்கப்பட்டது.

இந்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.








# ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் ஒரு மாதத்தில் 2 தடவைகள் கைது!

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களை இலக்கு வைத்து ஐஸ் போதைப் பொருட்களை வியாபாரம் செய்து வந்த சந்தேக நபரை ஒரு மாதத்தில் இரண்டாவது தடவையாகக் கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

இன்று (20) அதிகாலை கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய அந்தச் சந்தேக நபரை 1 கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய் துள்ளனர்.



அத்துடன் சந்தேக நபர் ஏலவே கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் மற்றுமொருவருடன் கல்முனை கடற் கரை பள்ளி வீதியில் வைத்து கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதான சந்தேக நபர் கல்முனை குடி மதிரிஸா வீதியை வசிப்பிடமாக கொண்ட இரண்டு பிள்ளையின் தந்தை என்றும் கடந்த 11ஆந்திகதி ஐஸ் போதை யுடன் ஏலவே அவர் கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்தவர் என்றும் விசாரணையில் இருந்து தெரிய வந் துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபரை இன்று கல்முனை பொலிஸ் நிலையத் தில் ஒப்படைத்த கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப் புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.





# குகதாசன் எம்.பியை வரவேற்றனர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள்

(ஹஸ்பர் ஏ.எச்.)

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் திரு கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குக தாசனுக்கு 18 அறநெறிப் பாடசாலைக ளைச் சேர்ந்த ஆசிரியர்கள் வரவேற்பு நிகழ்வு ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்து மன்றத் தலைவர் தவத்திரு பாஸ்கரன் குருக்கள் தலைமையில் மூதூர் சகாய புரத்தில் நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது.

18 அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட ஆசி ரியர்கள் இதில் கலந்து கொண்டனர்.

அறநெறிப் பாடசாலைகளில் காணப் படும் குறைபாடுகளை கே.எஸ்.குக தாசன் எம்.பி. கேட்டறிந்ததுடன் அவற் றுக்கான தீர்வுகளை மிக விரைவில் பெற்றுத் தருவார் என்று இதன்போது உறுதியளித்தார்.



# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சத்திரசிகிச்சை உபகரணம்

(த.சுபேசன்)

சாவா – 99 அமைப்பினரால், தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஊடாக திங்கட்கிழமை சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு ஒரு தொகுதி சத்திர சிகிச்சை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சத்திர சிகிச்சை நிபுணர் பேராசிரியர் எஸ்.ரவிராஜின் வேண்டுகோளுக்கு இணங்க தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஊடாக இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட் டுள்ளது.

உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் சாவா – 99 அணி சார்பில் யோ.பிரசன்னா, சி.தீபன், கி.ரிசோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# புதுடில்லியில் காற்றைச் சுவாசிப்பது 49 சிகரெட்டுகளின் புகைக்கு சமம்

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் காற்று வெளி மாசடைந்துள்ளதன் படி, அக் காற்றைச் சுவாசிக்கும் பட்சத்தில் ஒரு நபர் ஒரு நாளைக்கு சுமார் 49 சிகரெட்டுகளின் புகையைச் சுவாசிப்பதற்கு ஈடாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக வளி மாசு உள்ள நகரமாகப் புதுடில்லி இருப்பதாக வெளிநாட்டுச் செய்திகள் குறிப் பிடுகின்றன.

டில்லியின் வளி மாசு சுட்டெண் சராசரியாக 100 இற்குக் கீழே இருக்க வேண்டும்.

ஆனால், தற்பொழுது அங்கு வளி மாசு சுட்டெண் 100 ஐ கடந்து ஆபத்தான நிலையை எட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், டில்லி தேசிய உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகளுக்கு நச்சு வாயுக்களின் தாக்கத்தைக் குறைக்கும் வகையில், நீர்த்துளிகளைத் தெளிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, டெல்லி இனியும் இந்தியாவின் தலைநகராக இருக்க வேண்டுமா? என அங்கு நிலவும் காற்று மாசை குறிப்பிட்டு காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் டில்லியில் காற்று மாசு அதிகரித்துள்ளதால் கடந்த இரண்டு நாள்களாக டில்லியில் சுவாசப் பிரச்சினைகளோடு மருத்துவமனைகளுக்கு வருவோரின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஏ.ஆர். ரஹ்மானை பிரிகின்றேன் மனைவி சாய்ரா பானு அறிவிப்பு

## 29 வருட திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்தது

இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானை விவாகரத்து செய்வதாக மனைவி சாய்ரா அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது வழக்கறிஞர் அதிகாரப்பூர்வ அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

ஒஸ்கார் விருது பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானும், அவரது மனைவி சாய்ராவும் அடுத்த ஆண்டு 2025 மார்ச் மாதத்தில் 3 தசாப்த கால திருமண வாழ்க்கையை நிறைவு செய்ய இருந்தனர்.

எனினும் தற்போது ஏறக்குறைய 29 ஆண்டுகால திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது.

ரஹ்மானும் சாய்ராவும் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சென்னையில் திருமணம் செய்து கொண்டனர்.



ரஹ்மானுக்கும் அவரது மனைவிக்கும் கதீஜா, ரஹீமா மற்றும் அமீன் ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

இந்நிலையில் ஏ.ஆர்.ரஹ்மான் – சாய்ரா தம்பதி விவாகரத்து செய்ய உள்ளனர்.

இது குறித்து சாய்ராவின் வழக்கறிஞர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“திருமணமாகி பல வருடங்களுக்குப் பிறகு, கணவர் ஏ.ஆர். ரஹ்மானை பிரிந்து செல்வது என்ற கடினமான முடிவை எடுத்துள்ளார்.

இந்த முடிவு அவர்களின் உறவில் ஏற்பட்ட மன உளைச்சலுக்குப் பின்னர் எடுக்கப்பட்டது.

ஒருவருக்கொருவர் மிகவும் அன்பாக இருந்தபோதிலும், பிரிவது என முடிவு செய்துள்ளனர்.

மன கசப்புக்கள் மற்றும் பல சிரமங்கள் அவர்களுக்கிடையில் தீர்க்க முடியாத இடைவெளியை உருவாக்கியுள்ளது. மிகுந்த வலி மற்றும் வேதனையால் தான் இந்த முடிவை சாய்ரா எடுத்துள்ளார்.” என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று முதல் கேரளாவில் டிஜிட்டல் நீதிமன்றம்!

கேரளா – கொல்லத்தில் முழுமையான டிஜிட்டல் நீதிமன்றம் இன்று முதல் செயல்பட உள்ளது.

இந்தியாவிலேயே முதலாவது முழுமையான டிஜிட்டல் நீதிமன்றமான இதனை, கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் கேரள உச்ச நீதிமன்றத்தில் நடந்த விழாவின் போது உச்ச நீதிமன்ற நீதிபதி திறந்து வைத்துள்ளார்.

இந்நிலையில் இன்று முதல் அது செயற்பாட்டுக்கு வருகின்றது.

இந்த நீதிமன்றத்தில் மக்கள் 24 மணி நேரமும் வழக்குகளை தாக்கல் செய்யலாம். பிணை பெறுவதற்குக் கட்சிக்காரர்கள் மற்றும் பிணைதாரர்கள் முன்னிலையாகத் தேவையில்லை என தெரிவிக்கப்படுகின்றது.



அவர்கள் பிணையைப் பெறுவதற்கான ஆவணங்களை இணையம் மூலம் பதிவேற்றம் செய்தால் போதுமானதாகும் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# நியூஸிலாந்து நாடாளுமன்றத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொது மக்கள்

நியூஸிலாந்து நாடாளுமன்றத்திற்கு முன்பாக பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் அண்மையில் முன்வைக்கப்பட்ட சட்டமூலமொன்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மவோரி எனப்படும் நியூஸிலாந்தின் பூர்வீக பழங்குடி மக்களுக்கும் பிரித்தானிய அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட 184 ஆண்டுகள் பழமையான ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான சட்டமூலமொன்று நியூஸிலாந்து நாடாளுமன்றத்தில் அண்மையில் கொண்டுவரப்பட்டது.

இந்த சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சுமார் 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக நியூஸிலாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சட்டமூலமானது மவோரி மக்களின் உரிமைகளை வலுவிழக்கச் செய்வதாகவும், இனங்களுக்கிடையிலான உறவுகளைப் பல தசாப்தங்கள் பின்னோக்கிக் கொண்டு செல்வதற்கு வழிவகுக்கும் எனவும் எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவின் உட்கியாஸ்விக் நகரில் 64 நாள்களுக்கு சூரிய உதயம் இல்லை

அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள அலாஸ்காவின் உட்கியாஸ்விக் நகர மக்கள் இந்த ஆண்டின் இறுதி சூரிய அஸ்தமனத்தை நேற்று முன்தினம் அவதானித்துள்ளனர்.

மேலும், நேற்று முன்தினம் இறுதி சூரிய அஸ்தமனத்தைத் தொடர்ந்து 64 நாள்களுக்கு அடிவானத்திற்கு மேல் சூரியன் உதிக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உட்கியாஸ்விக்கில் கிட்டத்தட்ட 5,000 பேர் நேற்று முன்தினம் இறுதியாக சூரிய உதயத்தை அவதானித்தனர்.



அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள அலாஸ்காவின் உட்கியாஸ்விக் நகரம், வடதுருவத்தை அண்மித்து அமைந்துள்ள பகுதியாகும். இங்கு ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதியன்று சூரியன் மறையும்.

மீண்டும் அடுத்த ஜனவரி மாதத்தின் மூன்றாவது அல்லது நான்காவது வாரத்தில் தான் சூரியன் உதயமாகும்.

அதுவரையிலான 2 மாதங்கள் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் முழுமையாக இருளிலேயே வசிக்க வேண்டும்.

பூமி சூரியனை நோக்கி 23 பாகை சாய்வாக இருப்பதன் காரணமாக வடதுருவத்திலுள்ள சில பகுதிகளில் முழு இரவு அல்லது முழு பகல் ஏற்படுவதுண்டு.

இவ்வாறு முழுமையாக 2 மாதங்கள் இருளாக இருக்கும் நிகழ்வை போலார் நைட்ஸ் அல்லது துருவ இரவு என்று அழைக்கிறார்கள்.

# அமெரிக்க ஏவுகணைகளை பயன்படுத்தியது உக்ரைன்

அமெரிக்கா வழங்கிய ஏவுகணைகளை உக்ரைன் முதன்முறையாகப் பயன்படுத்தியுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

வடக்கு உக்ரைன் எல்லைப் பகுதியில் குறித்த ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறு ஏவப்பட்ட ஏவுகணைகளில் 5 ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டன எனவும் ஒரு ஏவுகணை சேதத்தை ஏற்படுத்தியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் உக்ரைன் நடத்திய 8 ஏவுகணை தாக்குதல்களில் இரண்டு மாத்திரமே ரஷ்யத் தரப்பினரால் தடுக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அதேநேரம், இந்த விடயத்தில் உக்ரைன் எந்தவித கருத்துக்களையும் முன்வைக்கவில்லை.

இதேவேளை, மோதலை அதிகரிப்பதற்கு அமெரிக்கா முயற்சிப்பதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் குற்றஞ் சாட்டியுள்ளார்.



அத்துடன், அமெரிக்கர்கள் இல்லாமல் குறித்த உயர் தொழில்நுட்ப ஏவுகணைகளை இயக்குவது சாத்தியமற்ற விடயமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க இராணுவ நிபுணர்களால் குறித்த ஏவுகணைகள் இயக்கப்பட்டுள்ளன என்பதனை தங்களது தரப்பு புரிந்து கொள்வதாகவும், அதற்கேற்ப பதிலளிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

புதன்கிழமை 20/11/2024

## கரட் உட்கொண்ட ஒருவர் உயிரிழப்பு

கனடாவில் இயற்கை உர வகைகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் கரட் வகைகளை கொள்வனவு செய்பவருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் 02



# கனேடிய தமிழ் காங்கிரஸ் போன்ற அமைப்புகள் இனவாத கோரிக்கைகளை முன்வைக்கின்றன

## விமல்வீரவன்ஸ தெரிவிப்பு

**கனேடிய தமிழ் காங்கிரஸ் போன்ற அமைப்புகள் இனவாத மத பிரிவினை வாத கோரிக்கைகளை முன்வைக்கின்றன என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

**வடக்கில் தேசியமக்கள் சக்திக்கு கிடைத்த வாக்குகள் இனவாதத்திற்கு எதிரானவை மாத்திரமல்ல பிரிவினை வாதத்திற்கும் எதிரானவை என அவர் தெரிவித்துள்ளார்.**

பிரிவினைவாத ஆதரவு தமிழ் தேசியகூட்டமைப்பு போன்றவற்றை தெரிவுசெய்வதற்கு பதில் தமிழ் மக்கள் ஜே.வி.பியை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியை தெரிவுசெய்துள்ளனர் இதன் மூலம் பிரிவினை வாதம் இனவாதத்தை நிராகரித்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே கனடா தமிழ் அமைப்புகளின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படுவதற்கு பதில் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களின் அபிலாஷைகளை சமமாக நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் ஆணை என விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.






# பொலிஸ் உத்தியோகத்தரை கடித்து காயப்படுத்தியவர் கைது

கனடாவின் வின்னிப்பெக் பகுதியில் நபர் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தரை காயப்படுத்தியுள்ளார்.

விசாரணை ஒன்றின் போது இவ்வாறு மேற்படி நபர், பொலிஸ் உத்தியோகத்தரை கடித்து, காயப்படுத்தியுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தரை தகாத வார்த்தைகளால் அச்சுறுத்தி 02




# தந்தை, பிள்ளைகளை காணவில்லை; மக்களின் உதவி கோரும் பொலிஸ்

கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தில் தந்தை மற்றும் இரண்டு பிள்ளைகளை காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வட பகுதியில் இருந்து அல்பர்ட் பயணம் செய்தவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

அவர்கள் மூவரையும் கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

ஹாரூன் ஹோம் மற்றும் இரண்டு பிள்ளைகள் இவ்வாறு காணாமல் போய் உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மூவருக்கும் என்ன நேர்ந்தது என்பது குறித்து அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

38 வயதான ஹாரூன் வெள்ளையினத்தவர் எனவும் அவர் 5 அடி 9 அங்குல உயரமானவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த சிறுவர்களை அவரே கடத்தி இருக்க வாய்ப்பு குறைவு என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இன்னும் சிறுவர்களையும் ஹாரோனையும் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



## கரட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவில் இந்த கரட் உட்கொண்டவர்களுக்கு ஈகோலி தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகை கரட்களை உட்கொண்டவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார், எனவும் 39 பேர் நோய்வாய்ப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த வகை கரட் சந்தையிலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு இந்த கரட் வகை நுகர்வால் ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் கனடிய சுகாதாரத் திணைக்களமும் இந்த கேரட் உற்பத்திகளை உட்கொள்வதன் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

கனடாவிலும் அமெரிக்காவிலும் விற்பனை செய்யப்பட்டு வரும் இயற்கை செய்கையின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கரட் வகைகளில் இவ்வாறு நோய் தொற்று தாக்கம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது கையை கடித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளார்.

26 வயதான ராவ்டீப் சிங் என்ற நபர் மீது இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தரை அச்சுறுத்தியமை, அவரை உடல் ரீதியாக தாக்கி காயப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் மேற்படி நபர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நபர் பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.





# டெய்லர் ஷிப்ட் இசை நிகழ்ச்சியை பயன்படுத்திப் பாரிய மோசடிகள்


உலகின் பிரபல பொப்பிசை பாடகி டெய்லர் ஷிப்ட்டின் இசை நிகழ்ச்சியை பயன்படுத்திப் பாரிய மோசடிகள் இடம் பெறுகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ பெர்லிங்டன் பகுதியைச் சேர்ந்த 400 பேர் மோசடியில் சிக்கியுள்ளனர் எம தெரிவிக்கப்பட கின்றது.

சுமார் மூன்று லட்சம் டொலர்கள் வரையில் இவ்வாறு மக்களிடம் இருந்து பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்த இசை நிகழ்ச்சிக்கான டிக்கெட் விற்பனை செய்வதாகக் கூறி இவ்வாறு பெருமளவு பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் இந்த இசை நிகழ்ச்சிக்கான டிக்கட் கொள்வனவின் போது மிகுந்த




அவதானத்துடன் செயற்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இணைய வழியிலும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பல மோசடி கும்பல்கள் மக்களை ஏமாற்றி வருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் பலத்த புயல் காற்று எச்சரிக்கை

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் பலத்த புயல் காற்று வீசக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் நிறுவனம் இது தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளது. மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் புயல் காற்று வீசும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

குறிப்பாக கரையோர பகுதிகளில் அதிக அளவில் இவ்வாறு பாதிப்பு ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு வாங்கூவர் தீவுகள் மற்றும் வடக்கு மத்திய கரையோர பகுதிகளில் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புயல் காற்று தாக்கம் தொடர்பில் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் மரங்கள் முறிந்து விழக்கூடும் எனவும் பயணங்கள் தாம தமாகலாம் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த புயல் காற்றுக்கு பாம் என பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.